


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஆகஸ்டு 12, 2021 | புரட்சி 20 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


# ஜாதி வெறியர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு

***ஜாதித் திமிரோடு பேசிய நடிகை, தலித் ஊழியரை காலில் விழ வைத்த ஜாதி வெறியர்கள் மீது தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நடிகைக்கு எதிராக மதுரையில் கழகத் தோழர்கள் புகார் மனு அளித்தனர்.***

அன்னூர் ஒன்றியத்திலுள்ள ஒட்டர்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணி செய்து வருபவர் முத்துசாமி. பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்.

அதே பகுதியைச் சேர்ந்த கோபிநாத் என்று அழைக்கப்படும் கோபாலசாமி என்பவர் தன்னுடைய சொத்து விவரங்களை சரிபார்ப்பதற்காக ஒட்டர்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்துக்கு சென்றிருக்கிறார். அப்போது பணியில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் கலைச் செல்வி, “ஆவணங்கள் முறையாக இல்லை. எனவே, முறையான ஆவணங்களை கொண்டு வாருங்கள்” என்று கூறியிருக்கிறார்.

இதில் ஆத்திரமடைந்த கோபிநாத், கலைச்செல்வியிடம் வாக்குவாதம் செய்திருக்கிறார். அப்போது உதவியாளர் முத்துசாமி கோபிநாத்தைத் தடுக்க முயன்றிருக்கிறார்.

இதில் மேலும் ஆத்திரமடைந்த கோபிநாத், ஜாதிப் பெயரைச் சொல்லி, முத்துசாமியைத் தகாத வார்த்தையில் திட்டியுள்ளார். “நான் நினைத்தால் நீ இந்த ஊரிலேயே இருக்க முடியாது. நீ இந்தப் பணியில் தொடர வேண்டுமென்றால், என் காலில் விழுந்து மன்னிப்புக் கேள்” என்று மிரட்டியுள்ளார்.

தற்போது, முத்துசாமி கோபிநாத்தின் காலில் விழுந்து கதறி அழுது மன்னிப்புக் கேட்கும் வீடியோ வெளியாகியிருக்கிறது. கோபிநாத் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, கலைச்செல்வி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதேவேளையில், கோபிநாத்தும், கலைச் செல்வி, முத்துசாமி ஆகியோர் மீது காவல் நிலையத்தில், “தன்னைத் தகாத வார்த்தைகளால் திட்டியதாக” புகார் அளித்திருக்கிறார். இது தொடர்பாக விசாரணை நடத்திய மாவட்ட நிர்வாகம், கோபிநாத் மீது வழக்குப் பதிவு செய்ய முடிவெடுத்தது. அரசு ஊழியரைப் பணி செய்ய விடால் தடுத்து, ஜாதியைச் சொல்லித் திட்டியது என வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 6 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளது.

### ஜாதி வெறி நடிகை

மீராமிதுன் என்ற நடிகை, பட்டியலின மக்களை ஜாதி ரீதியாக கேவலமான சொற்களால் ஜாதித் திமிரோடு பேசிய ‘வீடியோ’ வைரலாகி, பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பட்டியலின திரைப்பட இயக்குநர்கள், திரைப்படத் துறையிலிருந்தே வெளியேற வேண்டும் என திமிரோடு பேசி இருந்தார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் துணைப் பொதுச்செயலாளர் வன்னிஅரசு, சென்னை காவல்ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்தார்.



பட்டியலின மக்களை இழிவுபடுத்தி பேசியுள்ள நடிகை மீரா மிதுனை தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் கைது செய்ய கோரி மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 07.08.2021 அன்று மதுரை மாநகர காவல் துறை இணை ஆணையரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் திவிகவின் மதுரை மாவட்ட செயலாளர் மணியமுதன் மா.பா., மாவட்ட செயலாளர் திலீபன் செந்தில், மாநகர தலைவர் காமாட்சி பாண்டியன், திருமங்கலம் பொறுப்பாளர் மாளவிகா, கல்மேடு பொறுப்பாளர் பிரபாகரன், ஆதித்தமிழர் பேரவையின் தலித்ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் மீரா மிதுன் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம்உள்ளிட்ட ஏழு பிரிவுகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.


## “ஆம் நாங்கள் அசுரர்கள் இராவணன் பரம்பரையினர்”

***திருச்சியில் பார்ப்பனர்கள் மாநாடு கூட்டியபின் தம்மை ‘அசுரன், இராவணன்’ வாரிசாக பெருமையுடன் கலைஞர் பின் வருமாறு தெளிவுபடுத்தினார்.***

‘நாங்கள் அசுரர்களாக இருப்பதில் பெருமைப்படுகிறோம் ; நாங்கள் இராவணின் பரம்பரை’ என்று கலைஞர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நீதிக்கட்சித் தலைவர் சுந்தர ராவ் (நாயுடு) சிலையைத் திறந்து வைத்து பெரியார் திடலில் கலைஞர் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

“நேற்றைய தினம் ஒரு பத்திரிக்கையில் ஒரு சிலை திறப்பு விழா குறித்த அறிவிப்பில் தி.மு.க என்ற ‘அசுரன்’ என்று அக்கட்சியின் தலைவர் குறிப்பிட்டிருந்தார். உண்மை இப்போதாவது எங்களை நாட்டுக்குப் புரிய வைத்தார்களே என்பதில் மகிழ்ச்சி. மறைமலை அடிகள் போன்றோர் எல்லாம் ஆராய்ந்து தந்த கருத்துப்படி, அசுரர்கள் சுறா பானத்தை மறுக்கக் கூடியவர்கள். ‘சுரர்கள்’ சுராபானம் அருந்தக் கூடியவர்கள். அசுரர்கள் எந்த தியாகத்துக்கும் தயாரானவர்கள். திருப்பாற் கடலிலே இருக்கிற அமிர்தத்தை எடுப்பதற்காக மேருமலையை மத்தாக்கி, வாசுகி என்ற பெரிய பாம்பை கயிறாக்கி, அந்தப் பாம்பினுடைய தலையை (கோழைகளாகிய) அசுரர்கள் பிடித்துக் கொண்டு அந்த பாம்பினுடைய வாலை ‘வீரர்களான’(?) தேவர்கள் பிடித்துக் கொண்டு திருப்பாற்கடலை கடைந்து, அதிலிருந்து புறப்பட்ட அமிர்தத்தை



அசுரர்களுக்கு கொடுக்காமல் தேவர்கள் உண்டு மகிழ்ந்தார்கள் என்பது புராணம். இது அவர்களே சொல்லி வைத்த புராணம், விஷமுள்ள பாம்பின் தலையைப் பிடித்து அமிர்தத்தை எடுத்துக்கொடுத்த அசுரர்களுக்கு அமிர்தம் கிடைக்கவில்லை. வாலைப் பிடித்த அந்த ‘விருது வீரர் களுக்கு’ தான் கிடைத்தது என்று கூறுகிறது, புராணம். எனவே நாங்கள் அசுரர்களாக இருப்பதில் பெருமைப்படுகிறோம், சுரர்களான தேவர் கள் இப்போது வெளியே வந்து தங்களை யார் என்று அடையாளம் காட்டி கொண்டதில் மகிழ்ச்சி. இரக்கமற்ற அரக்கன் இராவணன் என்று கம்பர் எழுதினார். அந்தக் கம்பரையே நீதிமன்றத்தில் நிற்க வைத்து இராவணன் இரக்கமற்ற அரக்கனா என்று வாதாடும். ‘நீதி தேவன் மயக்கம்’ நாடகத்தை எழுதியவர் அண்ணா. எனவே அந்த இராவணன் பரம்பரையினர் நாங்கள்” **–கலைஞர்**

**(விடுதலை 19.01.1990)**

***குறிப்பு:*** *நீதிக்கட்சித் தலைவர் சுந்தரராவ் (நாயுடு) பிரிட்டிஷ் காலனி ஆட்சியில் பின்னி மில் வேலை நிறுத்தத்தின்போது வடசென்னையில் பட்டியலின மக்கள் தாக்கப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டபோது அம் மக்களோடு இணைந்து – மறுவாழ்வுப் பணிகளில் அர்ப் பணித்தார். அவரது சிலை எழுப்பூரில் நிறுவப்பட்டுள்ளது. அதை கலைஞர் திறந்தார்.*

## ஜெர்மன் பயிற்சியாளர் கடும் தாக்கு: நீரஜ் சோப்ரா தங்கம் வென்றதற்கு யார் காரணம்?

ஈட்டி எறிதல் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு பயிற்சி அளித்தவர் ஒரு ஜெர்மனியர். அவர் உவே ஹான். இவர் 1984இல் 100 மீட்டருக்கு மேல் ஈட்டி எறிந்து உலக சாதனை படைத்தார். இவரின் இந்த சாதனையை இது வரை யாரும் முறியடித்ததில்லை. இவர் தான் நீரஜ் சோப்ராவிற்கு பயிற்சியாளராக உள்ளார்.

இவர் தான் கடந்த ஜூன் மாதம் செய்தியாளர்களைச் சந்தித்த போது இந்திய விளையாட்டுத் துறை மீது அடுக்கடுக்கான பல குற்றச் சாட்டுகளை முன்வைத்தார். இந்த சந்திப்பின் போது, உவே ஹான்,

“இந்திய விளையாட்டு ஆணையம் (SAI), தடகள சம்மேளனம் (AFI) தங்களுக்கு எந்த ஒரு உதவியையும் செய்யவில்லை.

ஒலிம்பிக்கிற்கான பயிற்சி குறித்து எந்த ஒரு திட்டமும் அரசிடம் இல்லை. மேலும், விளையாட்டு வீரர்களுக்கு உயர்தர உணவையும் கொடுக்கவில்லை. தமக்கு ஒத்துவராத விதிமுறைகளை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு இந்திய அதிகாரிகள் மிரட்டினர்.

மேலும் நீரஜ் சோப்ரா ஒலிம்பிக்கில் பங்கேற்க அரசு தரப்பில் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஆசிய மற்றும் காமன்வெல்த் போட்டியில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றதால் அவரை JSW நிறுவனமே ஸ்பான்சர் (Sponsor) அளித்து உதவியது. இவரின் முயற்சி மட்டுமே இவரை இந்த இடத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

நான் பயிற்சியாளராக வந்தபோது என்னால் ஏதாவது மாற்ற முடியும் என நினைத்தேன். ஆனால் விளையாட்டு குறித்து அரசின் செயல்பாடுகளைப் பார்த்தபோது அது மிகவும் கடினம் என தெரிந்து கொண்டேன்” என வேதனையுடன் தெரிவித்திருந்தார்.

இந்திய விளையாட்டுத்துறை மீது இவர் வைத்த குற்றச்சாட்டுகளை முன்வைத்து, இந்தியாவின் விளையாட்டுத் துறை லட்சணம் இவ்வாறு இருக்க, பிரதமர் மோடியால் எப்படி வெற்றி பெற்ற வீரர்களிடம் தொலைப்பேசியில் பேச முடிகிறது? வாழ்த்து தெரிவிக்க முடிகிறது? என இணையத்தில் பலரும் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

# சிறைவாசிகள் விடுதலை: ஆளுநர்கள் தடுக்க முடியாது; உச்சநீதிமன்றம் முக்கிய தீர்ப்பு

- *சிறைவாசிகளை விடுதலை செய்யவும் தண்டனைக் குறைப்பு செய்யவும் மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் அரியானா மாநில அரசு தொடர்பான ஒரு வழக்கில் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. சிறைவாசிகள் தண்டனைக் குறைப்பை மாநில அமைச்சரவை எடுப்பதற்கு ஆளுநரின் ஒப்புதல் தேவையில்லை என்று அரியானா அரசு 2008இல் முடிவு எடுத்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் மாநில அரசின் உரிமையை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் '433ஏ' பிரிவு ஆயுள் தண்டனை சிறைவாசி 14 ஆண்டுகள் தண்டனையை அனுபவிப்பதை உறுதி செய்கிறது. 14 ஆண்டு தண்டனை முடிந்த கைதிகளை விடுதலை செய்ய மாநில அரசுக்கு முழு உரிமை உண்டு. 14 ஆண்டுகள் தண்டனை முடிவதற்கு முன்பு விடுதலை மாநில அரசு முடிவெடுத்தால் அதற்கு ஆளுநர் ஒப்புதல் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அமர்வு தீர்மானித்திருக்கிறது. ஆளுநரின் ஒப்புதல் என்பது ஆளுநர் தன்னிச்சையாக எடுப்பது அல்ல. அது மாநில அரசின் முடிவுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆளுநரின் 'அதிகார வரம்பை'யும் தெளிவுபடுத்தியிருக்கிறது. தீர்ப்பில் இது குறித்து இடம்பெற்றுள்ள வாசகம்:*

  "Recommendation of the appropritate government is binding on the head of the state" *மாநில அரசு எடுக்கும் தண்டனைக் குறைப்பு முடிவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட முடியாது. அதற்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும் என்று தீர்ப்பு தெளிவுபடுத்தியிருக்கிறது. அது மட்டுமின்றி இது தொடர்பாக மாநில அரசு ஆளுநரின் ஒப்புதல் பெறாமலேயே உத்தரவு பிறப்பிக்க முடியும்* (State Government can issue an order in this regard 'even without the governor's approval') *எனும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள 'மரபு'க்காகவே ஆளுநர்கள் ஒப்புதல் பெறப்படுகிறதே தவிர, ஆளுநருக்கே முடிவெடுக்கும் அதிகாரம் இல்லை; எனவே இந்த 'மரபு' நீடிக்கலாம்; அதை நீக்க வேண்டும் என்பதை முடிவுக்கு உச்சநீதிமன்றம் வந்திருக்கிறது. இந்த நிலையில் பேரறிவாளன், நளினி, இரவிச்சந்திரன் உள்ளிட்டோர் விடுதலையில் தமிழக அரசு இத்தீர்ப்பின் அடிப்படையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலிமை பெற்று வருகிறது.*

# 'ஆக்சிஜன் குழு' ஒன்றிய ஆட்சியின் பச்சைப் பொய் அம்பலம்

- *ஒன்றிய அரசு கூச்சமின்றி 'பொய் பேசும்' என்பதற்கு சான்றாக ஒரு செய்தி வெளி வந்துள்ளது.*

  *கொரானாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'ஆக்சிஜன்' சிலிண்டர்கள் முறையாக வழங்கப்படுகிறதா? எவ்வளவு சிலிண்டர் - எந்தெந்த மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது? இவை முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அரசு 2020இல் ஒரு குழு அமைத்தது. இந்தக் குழுவிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தகவல் அளிக்க ஒன்றிய அரசு மறுத்து விட்டது. வணிக இரகசியம் காப்புரிமைச் சட்டம், அமைச்சரவையின் இரகசிய முடிவுகள் என்ற காரணங்களினால் இது குறித்து தகவல்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்று ஒன்றிய அரசு கடந்த வாரம் மறுத்தது. தகவல் உரிமை பெறுவதற்கான அமைப்பின் தலைமை அதிகாரி மற்றும் அரசும் ஒட்டு மொத்தமாக இப்படி மறுப்பது நேர்மையல்ல. இதனைத் தொடர்ந்து பெட்ரோலியம் மற்றும் இரசாயனத் துறைக்கான செய்தித் தொடர்பு அதிகாரி, 'ஆக்சிஜன் கண்காணிப்புக் கமிட்டி' என்ற ஒன்றே அமைக்கப்பட வில்லை. கேள்வியைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டதால் கமிட்டியின் செயல்பாடுகளை வெளியிட முடியாது என்று அரசு சார்பில் கூறி விட்டோம்; கமிட்டி என்ற ஒன்றே கிடையாது" என்று எழுத்துப்பூர்வமாக பதில் அளித்திருக்கிறார்.*

  *'இந்து' ஆங்கில நாளேடு மட்டும் இந்த செய்தியை வெளியிட்டுள்ளதோடு ஆக்சிஜன் கண்காணிப்பு கமிட்டி ஒன்று, ஏப்.4, 2020இல் அமைக்கப்பட்டது உண்மை என்றும், அதற்கான உத்தரவு நகல், தன்னிடம் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது. கமிட்டியின் தலைவராக அப்போது பெட்ரோலியத் துறை செயலாளராக இருந்த குருபிரசாத் மொகாபாத்ரா நியமிக்கப்பட்டார் என்றும் அந்தக் கமிட்டி பல முறை கூடி, ஆக்சிஜன் குறித்த பிரச்சினைகளை விவாதித்தது என்றும் விவாதிக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை குறிப்பேடுகளில் பதிப்பிடப் பட்டிருக்கிறது என்றும் அத்தனையும் 'இந்து' ஏட்டிடம் இருக்கிறது என்றும் செய்தி வெளியிட்டுள்ளது. ஒன்றிய ஆட்சி எவ்வளவு கேவலமான ஆட்சி என்பதற்கு இதைவிட சான்று வேண்டுமா? 'இராமராஜ்யம்' என்றால் இப்படித்தான் இருக்கும்.*

# கேரள உயர்நீதிமன்றத்தின் சிறப்பான தீர்ப்பு

- *மனைவியின் விருப்பமின்றி பாலுறவுக்கு கட்டாயப்படுத்தும் கணவனிட மிருந்து மனைவி விவாகரத்து கேட்கலாம் என்ற புரட்சிகரமான தீர்ப்பை கேரள உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. சட்டத்தில் கணவனைத் தண்டிக்க இடமில்லை என்றாலும் மனைவி விவகாரத்து கேட்கலாம் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.*

# உ.பி. 'ரவுடிகள்' பட்டியலில் 'பிராமணர்களே' அதிகம்

- *உ.பி. மாநில முதல்வர் ஆதித்யநாத், தாக்கூர் சமூகத்தைச் சார்ந்தவர். உ.பி.யில் பார்ப்பனர்கள் மக்கள் தொகை அதிகம். 13 சதவீதம் பேர் இருக்கிறார்கள். தாக்கூர் சமுதாயத்துக்கும் பார்ப்பனர்களுக்கும் இடையே மோதல்கள் இருந்து கொண்டே இருக்கும். உ.பி. ரவுடிகள் பட்டியலில் பார்ப்பனர்கள் ஏராளம் இருக்கிறார்கள். ஆதித்தியநாத், கடந்த 2017 ஏப்ரல் முதல் ஜூலை வரை 630 'ரவுடிகள்' மீது வழக்கு தொடர்ந்து, அவர்களின் ரூ.1848 கோடி சொத்துகளை பறிமுதல் செய்துள்ளார். இவர்களில் பெரும்பாலோர் 'பிராமணர்கள்'! 'பிராமணர்கள்' மீது மட்டுமே ஆதித்யநாத் குறிவைத்து நடவடிக்கை எடுப்பதாக 'பூதேவர்கள்' குற்றம் சாட்டு கிறார்கள். காவல்துறையினரை சுட்டுக் கொண்ட ஒரு 'பிராமண' ரவுடியை உ.பி. காவல்துறை என்கவுண்டர் செய்துள்ளது. மாயாவதி, "பிராமணர்களுக்கு பகுஜன் சமாஜ் கட்சி தான் பாது காப்பானது" என்று அவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டுகிறார். ஆதித்யநாத் பார்ப்பனிய கருத்தியலை ஏற்றுக் கொண்டவர்தான்; ஆனால் ஜாதி அடிப்படையில் பார்ப்பனர்களை எதிர்க்கிறார்.*

# பெண் விஞ்ஞானிகளின் சாதனையே கொரோனா தடுப்பூசி



*கொரோனா ஒன்றாவது அலை, இரண்டாவது அலை, மூன்றாவது அலை என மனித குலத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக் கிறது. இந்த நிலையில் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை, மக்களிடையே உருவாகி இருக்கிறது. குறுகிய காலத்தில் ஒரு நோய் தொற்றுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டது என்பது மருத்துவ உலக வரலாற்றில் இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் இந்த தடுப்பூசிகளை கண்டு பிடிப்பதற்கு உழைத்த விஞ்ஞானிகள் யார்? அதன் பிண்ணனி என்ன என்ற செய்தி உலகத்தில் இருட்டடிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இது குறித்து இன்றைய இந்து ஆங்கில நாளேட்டில் 'சுப்ரனா பானர்ஜி' என்ற பெண் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். அந்த கட்டுரை முக்கியமான ஒரு கருத்தை வெளிச்சப்படுத்தி இருக்கிறது. கொரோனா தடுப்பூசி கண்டுபிடித்த அந்த விஞ்ஞான குழுவிற்கு தலைமை தாங்கி வழிநடத்தி தடுப்பூசிகளை வளர்த்து எடுப்பதில் பெரும் பங்காற்றியவர்கள் பெண் விஞ்ஞானிகள் என்ற உண்மையை இந்தக் கட்டுரையில் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.*

*'கோவிஷீல்டு' என்ற தடுப்பூசிக்கு அதை கண்டறிந்த விஞ்ஞான குழுவிற்கு தலைமை தாங்கி வழிநடத்தியவர் 'சாரா கில்பர்ட்' என்ற பெண் விஞ்ஞானி. அவருடைய பங்கு இதில் மிகவும் முக்கியமானது. 'கோவேக்சின்' இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி விஞ்ஞானிகள் குழுவிற்கு தலைமையேற்று வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றியவர் 'சுமதி' என்ற பெண் விஞ்ஞானி. ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தயாரித்த 'ஜேன்சன்'* (Janssen) *என்ற தடுப்பூசியை தயாரிப்பதில் மிக முக்கிய பங்காற்றியவர் டச்சு நாட்டைச் சேர்ந்த* 'Elena smolyarchuk' *பெண் விஞ்ஞானி. இந்த தடுப்பூசி தான் ஏனைய தடுப்பூசிகளைவிட சக்தி வாய்ந்தது என்று இப்போது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இவை எல்லா வற்றையும்விட இந்த தடுப்பூசி கண்டுபிடிப்பதற்கு அடிப்படையான ஒரு ஆய்வை நடத்தியதும் ஒரு பெண் என்பதுதான் இதில் மிகவும் முக்கியமானது. அவரது பெயர் 'கேட்டலின் கேரிகோ'. ஹங்கேரியில் பிறந்து தற்போது அமெரிக்காவில் விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறார்.*

*நோய் தொற்றுகளை கண்டுபிடிப்பது தொடர்பான ஆராய்ச்சி களில் அவர் 22 ஆண்டுகளாக தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக் கிறார். அவர் கண்டுபிடித்த ஒரு மகத்தான மருத்துவப் புரட்சி தான்* mRNA *என்ற புதிய டெக்னாலஜி ஆகும்.* mRNA *என்ற புதிய டெக்னாலஜியை அவர் கண்டுபிடித்ததன் வழியாகத்தான் இன்றைக்கு இந்த நோய்களில் இருந்து தடுக்கின்ற தடுப்பு ஊசிகளையும் கண்டுபிடிக்க முடிந்தது என்பது மிகவும் அடிப்படையான ஒரு செய்தி ஆகும். உலகத்தில் இதற்கு முன்* mRNA *என்ற டெக்னாலஜியை இதுவரை கற்பனை யில் கூட எவரும் சிந்தித்தது இல்லை. அத்தகைய கண்டுபிடிப்பை உலகிற்கு வழங்கி மகத்தான புரட்சியை செய்து காட்டியிருப் பவர், இந்த கேட்டலின் கேரிகோ என்ற அமெரிக்காவில் பணியாற்றுகின்ற, ஹங்கேரியில் பிறந்த பெண் விஞ்ஞானி. தன்னுடைய மருத்துவ ஆய்வுப் பயணத்தில் கடுமையான ஆண் ஆதிக்கத்தை சந்தித்ததாக கண்ணீருடன் பகிர்ந்துகொள்கிறார்.*

*தன்னுடைய சோதனைச் சாலையில் தன்னுடன் இணைந்து ஆய்வு நடத்துவதற்கு எந்த ஆண் விஞ்ஞானிகளும் தயாராக இல்லை. போதுமான நிதியும் தன்னுடைய ஆய்வுக்கு ஒதுக்கப்படவும் இல்லை. ஒரு கட்டத்தில் இந்த ஆய்வுத்துறையில் இருந்து ஒதுங்கிக் கொள்ளலாம் என்று அவர் முடிவெடுத்த நிலையில் 1968ஆம் ஆண்டு 'போட்டோ காபி சென்டர்' ஒன்றில் டாக்டர் 'ட்ரைவ் வெய்ஸ்' என்றவரை சந்தித்தபோது தான் இவரது ஆய்வுகளைப் பற்றி அவர் அறிந்து வியந்து போய் இவரது ஆய்வுக்கு உதவ முன்வந்தார், ஊக்கப்படுத்தினார். அதற்குப் பிறகு தான், 'நான் என்னுடைய ஆய்வைத் தொடர்ந்தேன்' என்று அவர் இப்போது கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார்.*

*கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்காவில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தடுப்பூசி முகாமை தொடங்கி வைக்கும், நிகழ்ச்சியில் அவர் பங்கேற்க வந்த போது கூடியிருந்த சுகாதாரப் பணியாளர்கள் எழுந்து நின்று கைதட்டி, கண்ணீருடன் அந்த விஞ்ஞானிக்கு வரவேற்பு கொடுத்த போது 'என்னுடைய 22 ஆண்டு கனவு இப்போது வெற்றி பெற்றிருக்கிறது' என்று அவர் மனம் நெகிழ்ந்து அந்த நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார். இந்த ஆண்டு நோபல் பரிசுக்கு தகுதி படைத்த ஒரே ஒரு விஞ்ஞானி இவராகத்தான் இருக்க முடியும் என்று அந்தக் கட்டுரையை சுப்ரனா பானர்ஜி எழுதியிருக்கிறார்.*

*அறிவியல் உலகிலும், மருத்துவ உலகிலும், விஞ்ஞான உலகிலும் ஆண்கள் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது, பெண் விஞ்ஞானிகள் எப்படிப் புறக்கணிக்கப்படுகிறார்கள், இந்தியத் திருநாட்டில் பெண்களுக்கான ஒடுக்குமுறைகள் வேறு வேறு வடிவத்தில் இருந்தாலும், அய்ரோப்பிய நாடுகளில் பெண்களுக்கான ஒடுக்கு முறைகள் வேறு ஒரு வடிவத்தில் உருவெடுத்து நின்று கொண்டிருப்பதை இந்த செய்திகள் நமக்கு உணர்த்திக் கொண்டு இருக்கின்றன. ஆனாலும் இந்த உலகம் முழுவதும் நோயினால் தவித்த மக்களை காப்பாற்றி அதற்கான தடுப்பூசியை கண்டுபிடித்த இந்த பெண் விஞ்ஞானிகளுக்கு தலைதாழ்ந்த வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வோம்.*

# ஒலிம்பிக் : பெண்கள் மீதான இழிவும் புறக்கணிப்பும்

டோக்கியோ 2020 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பாலினச் சமத்துவத்தைக் கிட்டத்தட்ட எட்டிவிட்டோம் என்று பெருமிதப் படுகிற வேளையில் உண்மையான பாலினச் சமத்துவத்தை அடையவில்லை என்கிற வேதனையும் எழுகிறது.

எந்தவொரு விளையாட்டிலும் ஆணுக்கு நிகரான எண்ணிக்கையில் பெண்கள் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன், பெண்கள் பங்கேற்கும் வகையில் 18 புதிய போட்டிகளையும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிமுகப்படுத்தியது. டோக்கியோ ஒலிம்பிக்கில் பெண்களின் பங்கேற்பு 49 சதவீமாக உயரக் காரணமாக இருந்த சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் செயல் அதிகாரிகள் குழுவிலேயே பாலின ஏற்றத்தாழ்வு நிலவுவது நகைமுரண். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் நிர்வாகக் குழுவில் 33.3 சதவீதப் பெண்களே இடம் பிடித்திருக்க, குழு உறுப்பினர்களில் 37.5 சதவீதத்தினர் மட்டுமே பெண்கள். பாரா ஒலிம்பிக் குழுவில் பெண்களின் எண்ணிக்கை 25 சதவீதம் மட்டுமே.

பாலினச் சமத்துவத்தை மேம்படுத்தும் எண்ணத்தில் இளம் தாய்மாரும் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வகையில் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், டோக்கியோவில் கரோனா தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளால் வீராங்கனைகள் குழந்தைகளைத் தங்களுடன் அழைத்து வரத் தடைவிதிக்கப் பட்டது. பாலூட்டும் தாய்மார் இதற்குக் கண்டனம் எழுப்பினர். அதைத் தொடர்ந்து தாய்மார் குழந்தைகளைத் தங்களுடன் தங்க வைத்துக் கொள்ளலாம் என்று ஜூன் மாத இறுதியில் அறிவிக்கப்பட்டது.

**டோக்கியோ ஒலிம்பிக்கின் ஒருங் கிணைப்புக் குழு தலைவர் யோஷிரோ மோரி, பெண்கள் அதிகமாகப் பேசுவார்கள் என்று கூட்டத்தில் பேசியதையடுத்து அந்தப் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.** அவருக்குப் பதிலாக ஒலிம்பிக் முன்னாள் வீராங் கனையும் ஜப்பானின் அரசியல்வாதியுமான செய்கோ ஹஷிமோட்டோ நியமிக்கப்பட்டார். அதேபோல், ஒலிம்பிக் தொடக்க விழாவின் கிரியேட்டிவ் இயக்குநர், ஜப்பானின் ஆடை வடிவமைப்பாளர் நவோமியின் தோற்றம் குறித்து மோசமான கருத்துகளைச் சொன்னதால் அவரும் அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கப் பட்டார்.

**சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் நிறுவனரான பியர் த கூபர்தான் 1896ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் பங்கேற்கத் தடைவிதித்தார். 1952ஆம் ஆண்டுவரை பத்து சதவீதத்துக்கும் குறைவான பெண்களே ஒலிம்பிக்கில் பங்கேற்றனர்.** அதன் பிறகு பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்ததே தவிர, பாலினச் சமத்துவத்தை முழுமையாக அடைய முடியவில்லை. இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, ஒலிம்பிக் வரலாற்றில் டோக்கியோ ஒலிம்பிக்கில் கடைப்பிடிக்கப்பட்ட பாலினச் சமத்துவ நடவடிக்கைகள் முக்கியமான மைல் கற்கள். ஒலிம்பிக் கமிட்டியின் அறிவிப்பால் பல நாடுகளும் தங்கள் அணியில் பெண்களை அதிக எண்ணிக்கையில் இடம் பெறச் செய்தன. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சீனா, கனடா ஆகிய நாடுகள் ஒருபடி மேலே போய், ஆண்களைவிட அதிக எண்ணிக்கையிலான பெண் களை ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்பின.

போட்டிக்கு ஏற்ற ஆடைகளைப் பெண்கள் அணிவது குறித்த விவாதத்தை ஜெர்மனியின் ஜிம்னாஸ்டிக்ஸ் அணி தொடங்கி வைத்தது. பெண்களை வெறும் உடலாகப் பார்க்கும் கலாச்சாரம் உலகம் முழுக்க நிலவிவரும் நிலையில் விளையாட்டுத் துறையும் அதற்கு விதிவிலக்கல்ல. பொதுவாக ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் கைகளையும் கால்களையும் வளைத்து இயங்குவதற்கு ஏதுவாக உடலை இறுக்கிப் பிடிக்கும் சிறிய ஆடைகளைத்தாம் அணிவார்கள். கால்கள் முழுவதும் தெரியும் வகையில் வடிவமைக்கப்பட்ட அந்த உடை தங்கள் உடலை வெளிப்படுத்துகிற விதத்தில் உடன்பாடு இல்லை என்று அறிவித்த ஜெர்மன் பெண்கள் அணி, கழுத்து முதல் கால் வரை மறைக்கும் முழு ஆடையை அணிந்தது. இது குறித்துப் பேசிய, அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை, “நான் அணிகிற உடையில் கால்கள் தெரிவதால் நான் உயரமாகத் தோற்றமளிக்கிறேன். அதனால், அந்த உடையை அணிவதில் எனக்குச் சங்கடமில்லை. அதற்காக அனைவரும் பிகினி உடையைத்தான் அணிய வேண்டும் என்கிற அவசியமில்லை. அவரவருக்கு எது சவுகரியமாக இருக்கிறதோ அதை அணியலாம்” என்று தெரிவித்தார். போட்டியின் போது ஜெர்மனி அணி அழைக்கப்பட, சிவப்பும் வெள்ளையும் கலந்த அந்த ஆடை அழகாக இருப்பதாகப் அறிவிப்பாளர் சொன்னார். ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் இறுதிப் போட்டிக்கு ஜெர்மனி அணி தேர்வாகவில்லை என்கிற போதும், ஆடை விஷயத்தில் கவனம் ஈர்க்கத் தவறவில்லை.

- டோக்கியோ ஒலிம்பிக் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், பெண்கள் அதிகமாகப் பேசக் கூடியவர்கள் என்று கூறியதற்காக அவரது பதவி பறிக்கப்பட்டது.
- 1896இல் பெண்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்கவே தடை போடப்பட்டது.
- 1952 வரை பத்து சதவீதத்துக்குக் குறைவான பெண்களே பங்கேற்றனர்.
- இந்திய ஹாக்கி அணியில் விளையாடிய வந்தனா, தலித் பெண் என்பதால் அவரது வீட்டின் முன் ஜாதி வெறியர்கள் இழிவாகப் பேசினர்.

பாலினச் சமத்துவத்துக்கான ஏற்பாடு களால் பலன் அடைகிறவர்கள் வெள்ளை இனப் பெண்களே என்கிறது வரலாறு. கனடா உள்படப் பெரும்பாலான நாடுகளில் கறுப்பினப் பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப் படவில்லை. நிற வேற்றுமையைக் களையாமல், பாலினச் சமத்துவம் குறித்து முழங்குவதால் எந்தப் பலனும் இல்லை. அனைத்துப் பெண் களுக்கும் சமமான வாய்ப்பு வழக்கப்படுவது தான் சமத்துவத்தை அடைய உதவும். அதேபோல் மாற்றுப் பாலினத்தவர் பங்கேற்பு குறித்த தகவல்களை ஒலிம்பிக் கமிட்டி வெளியிடவில்லை. ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் குறைந்தது ஓர் ஆண், ஒரு பெண் இருக்க வேண்டும் என்று அறிவித்ததே தவிர மாற்றுப் பாலினத்தவர் குறித்து எந்தக் குறிப்பும் தரப்படவில்லை.

டோக்யோ ஒலிம்பிக்கில் அரை இறுதி ஆட்டம் வரை அழைத்து சென்ற இந்திய பெண்கள் ஹாக்கி அணியின் உறுப்பினர் வந்தனா கட்டாரியா வீட்டின் முன்பு சாதி இந்துக்கள் அநாகரிக நடனம்... பட்டாசு வெடிப்பு... அணியில் அதிகம் தலித்துகள் என்பதால் அரை இறுதி ஆட்டத்தில் தோல்வி என சாதி ரீதியான வசவுகள்... எல்லா விளையாட்டுகளில் இருந்தும் தலித்துகளை வெளியே அனுப்ப வேண்டுமென்று கூச்சல்... உத்தரகாண்ட் மாநிலம், அரித்துவார் ரோஷனாபாத் என்ற கிராமத்தில் இந்தியாவின் செல்ல மகள் வந்தனா குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதி...

இதே போட்டியில் மூன்று முறை தங்கம் வென்ற முன்னாள் சாம்பியன் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது இதே அணிதான்... கால் இறுதி போட்டிக்கு இந்தியாவை தகுதியாக்கிய தென் ஆப்ரிக்காவுடனான போட்டியில் ஹாட் ட்ரிக் (தொடர்ச்சியாக மூன்று) கோல் அடித்து சாதனை புரிந்து வெற்றிக்கு பங்களித்தது வந்தனாதான்...

உலகம் முழுவதுமுள்ள மக்கள் குறிப்பாக விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் இந்தியா வின் மதிப்பை குறைத்துள்ளது... தேசத்திற்காக விளையாடும் பெருமை மிக்க வீரர்கள் மனதை இரணமாக்கியுள்ளது.

இம்முறை இந்திய பெண்கள் ஹாக்கி அணி நாடு முழுக்க பெரும் எழுச்சியை உருவாக்கியது. இந்த எழுச்சியை உருவாக்கிய பெண்கள், மிக எளிய பின்னணியிலிருந்து வந்தவர்கள். வேளாண் குடும்பம், வீட்டில் மகள் ஆடுவதை பார்க்க சரியாக ஒரு தொலைகாட்சிகூட இல்லாத குடும்பம், போட்டிக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தந்தையை இழந்த ஒரு வீராங்கனை, குடிக்கு அடிமையான தந்தை தந்த மன உளைச்சலை மீறி டோக்கியோவில் வெற்றியை நிலை நாட்டிய இன்னொரு வீராங்கனை என்று இவர்களது கதைகளை கேட்க கேட்க நெஞ்சு விம்முகிறது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து
பா.ஜ.க. ஆட்சி வரை (6) - கட்டுரை
அடுத்த இதழில் தொடரும்



## அரச மரத்தடி மேடையில் அரசுத் திட்டத்தைத் தொடங்கிய முதல்வர்


Chief Minister orders removal of banners

Austerity marks Stalin's visit

SPECIAL CORRESPONDENT

No large banners or glitter, no flowers or satin-wrapped chairs, but only the shade of a grand old peepal tree and a rustic platform with a fresh coat of cement that lent the stage for the launch of 'Makkalai Thedi Maruthuvam' in Krishnagiri district on Thursday.

The preparations for Chief Minister M.K. Stalin's arrival, too, were marked by austerity. It all began after he arrived in Hosur on Wednesday evening. On a quick visit to the house of MLA Y. ... four large circular banners dotting the stretch. Official sources said he had a word with the Collector, and revenue officials were called to have them removed. Barring DMK flags that lined some stretches of the highway, Mr. Stalin's visit was bereft of ostentation.

Returning, Mr. Stalin charmed a woman loyalist, stopping his car and taking his mask off at her request. In a video circulated, his convoy is seen stopping at the request of the woman, who then insists he take his mask off. "It's been many ...

‘ஓசூர் அருகே மக்களைத் தேடி வரும் மருத்துவம்’ என்ற திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், ஆக.5, 2021 தொடங்கி வைத்தார். 45 வயதுக்கும் மேற்பட்ட சர்க்கரை, இரத்த அழுத்தம் நோய்க்கு உள்ளான வர்கள், ‘சிறுநீரக’ சிகிச்சைக்கான ‘டயாலிஸ்’ தேவைப்படு வோருக்கு வீடு தேடிச் சென்று மருத்துவப் பணியாளர்கள் சிகிச்சை, மருந்துகளை அளிக்கும் திட்டம்; 1968இல் சீனாவில், மாசேதுங் - கலாச்சாரப் புரட்சி காலத்தில் இப்படி கிராமம் கிராமமாக மக்களை தேடிப் போய் சிகிச்சை செய்யும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மக்கள் நலத் திட்டங்களில் உலகுக்கே வழிகாட்டும் அய்ரோப்பிய நாடுகளில்கூட இப்படி ஒரு திட்டம் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மருத்துவப் பணியாளர்களாக பெண்களே பங்கேற்கும் இத் திட்டம் தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன்பு அறிவித்த 7 தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதலமைச்சர் தொடங்கியுள்ள இத்திட்டம், அதே நேரத்தில் தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, கோவை, சென்னை, சேலம், மதுரை மாவட்டங் களில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் தமிழ்நாடு முழுதும் அமுல்படுத்தப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். 30 இலட்சம் குடும்பங்களைச் சார்ந்த ஒரு கோடிப் பேர் பயன் பெறும் இத்திட்டத்துக்காக 1264 பெண் மருத்துவப் பணியாளர்கள், 50 ‘பிசியோதெராப்சிஸ்டுகள்’, 50 செவிலியர்கள் பணியமர்த்தப்பட் டுள்ளனர். முதல்வரின் நிகழ்ச்சி மிக எளிமையாக நடந்தது என்று ‘இந்து’ ஆங்கில நாளேடு செய்தி வெளியிட் டுள்ளது. அந்த ஏடு (ஆக. 6, 2021) வெளியிட்டுள்ள செய்தி.

பெரிய பெரிய ‘கட்அவுட்டுகள்’ இல்லை; ஒளி சிந்தும் வண்ண விளக்குகள் இல்லை; அலங்காரத் துணிகள் போர்த்தப்பட்ட இருக்கைகள் இல்லை; கிராமத்தின் பழைய அரசமரத்தைச் சுற்றி சிமெண்ட் பூசப்பட்ட மரத்தடி மேடையிலிருந்து இத்திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

முதல்வர் வருகைக்கான ஏற்பாடுகளும் எளிமையாகவே நடந்தன. வருகைக்கான ஏற்பாடுகளே முதலமைச்சர் முதல் நாள் மாலை ஓசூருக்கு வந்த பிறகு தான் தொடங்கின. வந்தவுடன் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ் இல்லம் சென்று அவரது துணைவியார் மறைவுக்கு ஆறுதல் கூறினார். திரும்பும் வழியில் தனது படத்துடன் வட்டமான பெரிய நான்கு பேனர்கள் அமைத்திருப்பதைப் பார்த்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய்த் துறை அதிகாரிகளை உடனே அழைத்து அந்த பேனர்களை அகற்ற உத்தரவிட்டார் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன. வழியில் சில தி.மு.க. கொடிகள் மட்டும் பறந்ததைத் தவிர வேறு எந்த ஆடம்பர ஏற்பாடும் இல்லை. நிகழ்ச்சி மிக எளிமையாகவே நடந்தது. பயணம் முடித்து திரும்பும் போது ஒரு பெண், முதல்வர் காரை நிறுத்தச் சொன்னபோது காரை நிறுத்தினார். முகத்தில் போட்டுள்ள ‘மாஸ்க்’கை அகற்றி முகத்தைக் காட்டுங்கள் என்று அந்தப் பெண் வேண்டுகோள் விடுத்ததை ஏற்று, புன்னகையோடு மாஸ்கைக் கழற்றினார்.”

இவ்வாறு ‘இந்து’ ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பு: அரச மரத்தடியில் இந்த மகத்தான மருத்துவத் திட்டத்தைத் தொடங்கிய காட்சியை தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் புகைப்படமாகக்கூட ஏடுகளுக்கு வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சிறப்புடன் நடைபெற்ற அணைக்கரை பெரியாரியல் பயிலரங்கம்

நெல்லை மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், நெல்லை மாவட்டம் ஏர்வாடி அணைக்கரையிலுள்ள, மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன் இல்லமான நாச்சியார் வடிவு இல்லத்தில் 08.08.2021 ஞாயிறு காலை 10 மணி அளவில் பெரியாரியல் பயிரங்கம் தொடங்கியது.

பயிலரங்கில் கலந்து கொண்டவர்களை வரவேற்றும் பயலரங்கின் நோக்கம் குறித்தும் நெல்லை மாவட்டத் தலைவர் பா. பால்வண்ணன் தொடக்க உரையாற்றினார். மறைந்த திவிக தலைமை குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் மற்றும் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரனின் தாயார் கோயில் தங்கம் ஆகியோரின் மறைவுக்கு இரண்டு நிமிடம் எழுந்து நின்று அமைதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

‘திராவிடம் அறிவோம்’ என்ற தலைப்பில் கழக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் திராவிடர் இயக்கம் தோன்றியதற்கான அவசியத்தையும், தோன்றிய வரலாறு, மற்றும் அதன் பணிகள் குறித்தும் மிக விரிவாக பயிற்சி வகுப்பை எடுத்தார். நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் பரிணாமம் குறித்தும், பெரியாரின் தொண்டு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். நூற்றாண்டு காணும் திராவிடர் இயக்க வரலாற்றை ஒரு நாளில் விளக்கிவிட முடியாது. அதனால் ஜாதி ஒழிப்பு, தனித் தமிழ்நாடு (தமிழ் தேசியம்) பெண்ணுரிமை களத்தில் பெரியார் ஆற்றிய பணிகளை பட்டியலிட்டார்.

கேள்வி - பதில் நிகழ்வில் தோழர்கள் கேள்விக்கு பதிலுரைத்தார். மாலை 6.00 மணிக்கு பயிரலங்கம் நிறைவுற்றது. பயிலரங்கை தூத்துக்குடி வே.பால்ராசு ஒருங்கிணைப்பு பணியினை செய்தார். மதிய உணவிற்கு பின் இரண்டாம் அமர்வு தொடங்கும் முன், தென்காசி மாவட்ட அறிவியல் மன்ற பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ‘பெரியார் ஒருவர்தான் பெரியார்’ என்ற காசி ஆனந்தனின் பாடலைப் பாடினார். காலை தேநீர், மதியம் பிரியாணி, மாலை தேநீர் போன்றவற்றை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தோழர்களுக்கு குறிப்பேடு எழுதுகோல் தரப்பட்டது. பயிலரங்கில் 6 பெண்கள் உட்பட 33 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் ஆர்வமுடன் பயிலரங்கில் குறிப்புகள் எடுத்துக் கொண்டனர். இவ் ஏற்பாடுகளை எல்லாம் மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன் ஆர்வமுடன் செய்திருந்தார்.




## தமிழ் மட்டுமே அர்ச்சனை என்று 1974இல் தி.மு.க. அரசு வெளியிட்ட ‘புரட்சிகர’ ஆணை

அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற இயக்கத்தை தமிழ்நாடு முழுவதும் 47 ஆகம கோயில்களில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தொடங்கியிருக்கிறார். அதற்கான பெயர் பலகையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டிருக்கிறார். முதலமைச்சரே இந்தப் பெயர் பலகையை வெளியிட்டதன் வழியாக தமிழக அரசு இந்த தமிழ் வழிபாட்டு உரிமைக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்பதை உணர்த்தியிருக்கிறது. இதற்கு தேர்வு செய்யப்பட்ட முதல் கோயில் “மயிலை கபாலீஸ்வரர் கோயில்” என்பது குறிப்பிடத்தக்கதாகும். அறிவிப்பு பலகையில் தமிழ் வழிபாடு நடத்த விரும்பும் பக்தர்கள் தமிழ் மந்திரத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தமிழ் ஓதுவார் அலைபேசி எண் ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் சமஸ்கிருத மந்திரங்களை ஓதி வரும் பாலாஜி குருக்கள் நாங்களும் தமிழில் அர்ச்சனை செய்யத் தயார் என்று இப்போது அறிவித்திருக்கிறார். தமிழ் மறை ஓதுவோர்கள், எங்கே தங்கள் வருமானத்தை பறிப்பதோடு தங்களது பாரம்பரிய உரிமைக்குரிய இடத்தை பிடித்துக் கொண்டு விடுவார்களோ என்ற அச்சம் போலும் , இந்த அச்சத்தினால் இப்படி பேசுகிறார்கள் போல் இருக்கிறது. வடபழனி முருகன் கோயிலில் ஒவ்வொரு நாளும் நான்கு முறை பூஜை நடக்கிறது. அது வடமொழியிலான சமஸ்கிருதத்தில் தான். கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகாலை பூஜை மட்டும் தமிழில் நடத்தி வருவதாகவும் வேத புரோகிதர்கள் தரப்பில் இப்போது கூறப்படுகிறது.

இது 60 ஆண்டு கால போராட்டம். தமிழ் வழிபாட்டு உரிமைக்காக பலரும் குரல் கொடுத்து வந்திருக்கிறார்கள். தமிழிலும் வழிபாடு நடத்தப்படும் என்று கோயில்களில் அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டது. பிறகு படிப்படியாக அந்த அறிவிப்புப் பலகைகள் காணாமலே போய்விட்டன. 1971இல் திமுக அமைச்சரவையில் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த ’கண்ணப்பன்’ அவர்கள் அனைத்துக் கோயில்களிலும் தமிழில் வழிபாடு நடத்தப்படும் என்று அறிவித்தார். பிறகு சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர் இதை வழி மொழிந்தார்.

1974இல் ஒரு புரட்சிகர அறிவிப்பை கலைஞர் வெளியிட்டார். சமஸ்கிருதத்தை கோயிலில் இருந்து Knockout செய்தார். தமிழில் மட்டுமே அர்ச்சனை என்ற அறிவிப்பை அறநிலையத்துறை வழியாக கலைஞர் வெளியிட்டார். அவ்வளவு தான், பூதேவர்கள் நாடே பற்றி எரிவது போல கூக்குரல் இட்டார்கள். ஆணை ஒரு வாரத்திற்குள்ளாகவே திரும்பப்பெறப்பட்டது என்பது கடந்த கால வரலாறு. 1980இல் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த ஆர்.எம்.வீரப்பனும் தமிழ் வழிபாட்டுக்கு குரல் கொடுத்தவர் தான். ஆனாலும் பூதேவர்கள்,வேத புரோகிதர்களின் திட்டமிட்ட சதியால் தமிழில் ஒலி கோயிலுக்குள் கேட்கவே முடியவில்லை.

தில்லை நடராசர் கோயிலில் தீட்சதர்கள் தேவாரம் பாடிய வயது முதிர்ந்த ஆறுமுகனார் என்ற ஓதுவாரை ரவுடித்தனமாக தாக்கி இரத்தம் சிந்த சிந்த வெளியே இழுத்துப்போட்டார்கள். இறுதி மூச்சு வரை அந்த ஓதுவார் போராடி போராடி உயிர் நீர்த்தார். நடராசன் காதில் தேவார, திருவாசகம் கேட்பதே தீட்டு என்று கருவறைக்கு வெளியே ஒரு இடத்தில் தேவாரத்தைப் பாடிக் கொள் என்று தீட்சதர்கள் அனுமதித்தார்கள். அதற்கும் நீதிமன்ற போராட்டத்தை நடத்த வேண்டி இருந்தது.

பக்தி உணர்வுள்ள தமிழர்கள் ஆதரவு தான் இதில் மிகவும் முக்கியம். தமிழில் வழிபாடு நடத்து, என்ற உணர்வை பக்தியில் மூழ்கியுள்ள தமிழர்கள் மொழி இன உணர்வோடு தயங்காமல் வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் தமிழக அரசு எடுக்கும் இந்த இயக்கம் வெற்றியை நோக்கி முன்னேறிச் செல்லும்.

திராவிட இயக்கம் தமிழை வளர்க்கவே இல்லை என்று முழங்கி வரும் சில தமிழ் தேசிய குழுக்களும் இருக்கின்றன. அவர்கள் தமிழக அரசின் இந்த முடிவை வரவேற்று ஒரு அறிக்கை கூட வெளியிட விரும்பாத ’தாராள சிந்தனையாளர்களாவே’ இருக்கிறார்கள்.

## கலைஞர் நினைவு நாளில் கோவை கழகத்தினர் மரியாதை

கலைஞரின் மூன்றாவது நினைவு நாள் நிகழ்வு, கோவை மாநகர துணைத் தலைவர் வெங்கட் தலைமையில் 07.08.201 அன்று காலை 10 மணியளவில் காந்திபுரம் அண்ணா சிலை முன்பு கலைஞர் படம் வைத்து அவருடைய சாதனைகளை முழக்கங்களாக எழுப்பி வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் இராமச்சந்திரன், கோவை மாநகரத் தலைவர் நேருதாசு, மாநகரச் செயலாளர் நிர்மல் மற்றும் மாதவன் சங்கர், ராஜி, கிருஷ்ணன், சங்கனூர் கார்த்திக், எழிலரசன், சதீஷ், ரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவை கணபதி பகுதியைச் சேர்ந்த அமிலா (3.8.2021), கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தார்.

## நெமிலி கழகத்தினர் முயற்சியால் கிடைத்த வீட்டுமனை

நெமிலி புன்னகேஸ்வர் ஆலயத்திற்கு சொந்தமான இந்து சமய அறநிலையத்துறை இடத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்த 9 குடும்பங்களை காலி செய்ய தாசில்தார் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து, 23.07.2021 அன்று கிராம நிர்வாக அலுவலர் (VAO) அறநிலையத்துறை அதிகாரிகள், ஆகியோரை, வேலூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் திலீபன் தலைமையில், திருநாவுக்கரசு(விசிக), கவிஞர் வெ.குமார், பாண்டியன், நரேன் ஆகியோர் வருவாய் கோட்டாட்சியரிடம் (RDO) அப்புறப்படுத்தக் கூறிய குடும்பங்களுக்கு ஆதரவாக முறையிட்டதன் அடிப்படையில், ஓச்சலம் அருகில் 9 குடும்பங்களுக்கும் வீட்டுமனை வழங்க அரசு உறுதி அளித்துள்ளது.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

திருச்சி திவிக தோழர் முருகானந்தம் துணைவியாரின் நினைவு நாளையொட்டி (10.08.2021) புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சிக்காக ரூ.500 நன்கொடையாக வழங்கியுள்ளார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th August 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN